**மின்வலு மற்றும் சக்தி அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை – 2010 ஆம் ஆண்டு**

1. **ஒதுக்கீட்டுத் தலைப்பு 119 - மின்வலு, எரி சக்தி அமைச்சு**

மின்வலு, எரி சக்தி அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கை, இணக்கக் கூற்றுக்கள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 நவம்பர் 15 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள், கருத்துரைகள், மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களின் மீளாய்வு, கொடுக்கல் வாங்கல் மாதிரிகளது, போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தது.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரச நிதி மற்றும் நிர்வாக பிரமாணங்களுக்கு இணங்க பேணப்பட்டு வருதல், தயாரித்தல் மற்றும் நியாயமாக சமர்ப்பித்தல் பிரதான கணக்களிப்பு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய

பொருண்மையான பிறழ்கூற்றுக்கள் அற்ற வகையிலான கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் என்பவற்றை தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பிக்கப்படுவதற்கு உரியவகையிலான உள்ளகக்கட்டுப்பாடு திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் நடாத்தலும் இப் பொறுப்பில் உள்ளடங்கும்.

## 1.3 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், மின்வலு, எரி சக்தி அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக் கூற்றுக்கள் என்பன இதன் (அ) முதல் (உ) வரையில் காண்பிக்கப்பட்டுள்ள பொது அவதானிப்புக்கள் மற்றும் 1.4 முதல் 1.11 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புகள் என்பவற்றை தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டுள்ளது.

### (அ) வருடாந்த செயற்பாட்டுத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக அமைச்சினால் வருடாந்த செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) கணக்குகளைச் சமர்ப்பித்தல்

#### தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை

அமைச்சிற்குச் சொந்தமான ஓர் கப் வண்டியும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் தொடர்பாக எவ்வித விபரமும் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. இவ் வாகனங்களிற்காக திறந்த அனுமதிப்பத்திரம் ஒன்று உரித்தானதெனவும் திறந்த அனுமதிப்பத்திரம் கணனிமயமாக்கப்பட்ட 2006 ஆம் ஆண்டிலிருந்து இவ் வாகனத்திற்காக எவ்வித அனுமதிப்பத்திரமும் பெற்றுக்கொள்ளப் பட்டிருக்கவில்லை எனவும் மேல் மாகாண மோட்டார் போக்குவரத்து மாகாண ஆணையாளரின் 2010 செப்தெம்பர் 07 ஆம் திகதிய கடிதத்தின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**(இ) ஒதுக்கீட்டுக் கணக்கு**

**மொத்த ஏற்பாடும் செலவினமும்**

(i) மின்வலு, எரி சக்தி அமைச்சின் கீழ் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 29,060,918,981 ஆனதுடன் மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 26,099,058,364 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், தேறிய சேமிப்புகள் ரூபா 2,961,860,617 ஆனதுடன் இது மொத்த தேறிய ஏற்பாட்டின் 10% ஆகும். விபரம் பின்வருமாறாகும்.

| செலவின் தன்மை | வருடாந்த மொத்த மதிப்பீட்டு ஏற்பாடு | சகல சீராக்கங்களும் மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் தேறிய ஏற்பாடு | உள்ளபடியான செலவினம் (2010.12.31 இல் உள்ளவாறு) | சேமிப்பு (2010.12.31 இல் உள்ளவாறு) |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| மீண்டெழுபவை | 1,396,646,000 | 1,388,546,000 | 815,035,690 | 573,510,310 |
| மூலதனம் | 24,888,140,000 | 27,672,372,981 | 25,284,022,674 | 2,388,350,307 |
| **கூட்டுத்தொகை** | **26,284,786,000** | **29,060,918,981** | **26,099,058,364** | **2,961,860,617** |

**(ii) பாதீட்டு முரண்**

செயற்பாட்டு நிகழ்ச்சித்திட்டத்தின் மூலதனச் செலவினம் மற்றும் அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டத்தின் 06 மூலதன செலவின விடயங்களிற்கு உரித்தான ரூபா 718,041,000 தொகையான ஏற்பாடு முற்றாக சேமிக்கப்பட்டிருந்தது. இதற்கு மேலதிகமாக மேலும் 06 செலவின விடயங்களின் கீழ் ரூபா 628,320,883 கூட்டுத்தொகையான ஏற்பாடுகள் எஞ்சியிருந்ததுடன் இது அச் செலவினங்களின் மொத்த தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக நூற்றிற்கு 49 முதல் நூற்றிற்கு 97

வரையான வீச்சில் காணப்பட்டது. இச் சேமிப்புகளுக்காக போதிய காரணங்கள் ஒதுக்கீட்டுக் கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) பொது வைப்புக் கணக்கு**

நிதிப் பிரமாணம் 427 இன் ஏற்பாடுகளின் பிரகாரம் பொது வைப்புக் கணக்கு மீதி திறைசேரிப் புத்தகங்களுடன் ஒப்பிடப்பட்டிராததுடன் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 12,882,241 தொகையான வேறுபாடு அவதானிக்கப்பட்டது.

**(உ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று**

(i) 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம் 03 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலமாக அறவிடப்பட வேண்டியதாகக் காணப்பட்ட நிலுவைக் கடன் மீதி ரூபா 457,408 ஆகக் காணப்பட்டதுடன் இதனை அறவிடுவதற்கான தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

(ii) 2005 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்டிருந்த ரூபா 1,302,243 தொகையான இனங்காணப்படாத மீதி மீளாய்வாண்டின் இறுதியிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(iii) 2004 ஆம் ஆண்டிற்கு முன்னர் அமைச்சிற்கு இடமாற்றம் பெற்று வருகைதந்த உத்தியோகத்தர்களின் முறையே ரூபா 212,092 கூட்டுத்தொகையான கடன் மீதியைத் தீர்த்து வைக்காது தொடர்ந்து முன்கொண்டுவரப்பட்டிருந்ததுடன் இது தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(iv) தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.3 ஆம் பந்தியின் பிரகாரம் இரத்துச் செய்யப்பட்டிராத பிணைக்கு

உத்தியோகத்தர் கையொப்பமிட வேண்டிய போதிலும் அவ்வாறு செயற்படாது மீளாய்வாண்டின் போது செலுத்தப்பட்டிருந்த கடன் தொகை அளவு ரூபா 1,446,315 ஆகும்.

(v) 1998 ஆம் ஆண்டின் போது காலமாகிய உத்தியோகத்தரிடம் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 184,712 தொகையான ஆதன கடன் தொடர்பாக தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(vi) இடர் கடன் செலுத்தப்படுகையில் பிணைக்கு உட்பட்ட பிணையாளிகளின் வயது 56 இனைக் கடந்திருந்ததுடன் அவர்களது ஓய்வூதியப் பணிக்கொடைக்கு மேலாக கடனுக்காக பிணையளித்திருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 1.4. சொத்துக்கள் முகாமைத்துவம்

### (அ) வெளித்தரப்பினருக்காக வழங்கப்பட்டிருந்த சொத்துக்கள்

அமைச்சிற்குரிய 03 வாகனங்கள் மின்சார சபையின் பயன்பாட்டிற்காக வழங்கப்பட்டிருந்தன.

### (ஆ) வேறு நிறுவகங்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் முறையற்ற விதத்தில் பயன்படுத்தல்

அமைச்சினால் பொது முயற்சிகள் மக்கள்மயமாக்கும் அமைச்சிற்குரிய 2 வாகனங்களும், இலங்கை பெற்றோலியக் கூட்டத்தாபனத்திற்குரிய ஒரு வாகனமும், மஹாவலி அபிவிருத்தி அதிகாரசபைக்கு உரித்தான ஒரு வாகனமும், இலங்கை மின்சார சபைக்கு உரித்தான 9 வாகனங்களும் முறையற்ற விதத்தில் பயன்படுத்தப்பட்டிருந்தன.

## 1.5 இணங்காமைகள்

### சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே விபரித்துக் காட்டப்பட்டுள்ளன.

(அ) சுற்றறிக்கை ஏற்பாடுகள்

(i) 2006 சனவரி 04 ஆம் திகதிய சீஎஸ்ஏ/பீ1/40 ஆம் இலக்க அரச செலவின முகாமைத்துவ சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்ட எல்லைகள் மீறப்பட்டு 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 244,796 தொகையும் மீளாய்வாண்டின் சனவரி முதல் ஏப்ரல் வரை ரூபா 58,700 தொகையான தொலைபேசிச் செலவினமும் அமைச்சினால் ஏற்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 2.8 மில்லியன் தொகை செலவிடப்படும் ஒப்பந்தத்திற்காக அரசாங்க கொள்வனவு நடைமுறை வழிகாட்டியின் 4.3 ஆம் பந்தியின் ஏற்பாடுகளின் பிரகாரம் விலைகள் கோரப்படுவதற்கு முன்னர் காரியாலய மதிப்பீடு ஒன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 செயலாற்றல்

### திட்டமிடலும் செயலாற்றலும்

மீளாய்வாண்டின் போது செயற்படுத்தப்படுவதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த (ரூபா 1998 மில் தொகையான ஏற்பாட்டில்) 27 அபிவிருத்தி நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.7 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் ஏற்படுத்தப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றவையாகக் காணப்பட்டன. அவதானிக்கப்பட்ட அத்தகைய சந்தர்ப்பங்கள் சில பின்வருமாறாகும்.

(அ) மீளாய்வாண்டின் போது 07 உத்தியோகத்தர்களின் பட்டப் பின்படிப்பு மற்றும் டிப்ளோமா பாடநெறிகளுக்கான கட்டணமாக ரூபா 270,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும் அமைச்சு அந்த உத்தியோகத்தர்களுடன் உடன்படிக்கையை ஏற்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) 2010 ஏப்ரல் மாதம் முதல் ஒரு வருட காலத்திற்கு அமைச்சிற்கு சேவைக்காக நியமிக்கப்பட்ட மின்சார சபை பிரதி பொது முகாமையாளருக்கு அமைச்சரவைத் தீர்மானத்திற்கு முரணான வகையில் ரூபா 127,389 தொகை சம்பளம் மேலதிகமாகச் செலுத்தப்பட்டிருந்தது.

## 1.8 நட்டங்களும் இழப்புகளும்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் நட்டங்களும் இழப்புகளும் ஏற்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மின்சாரப் பட்டியல்கள் குறித்த காலத்திற்குள் செலுத்தப்படாததன் காரணமாக ரூபா 58,206 தொகையான மிகையறவீட்டுக் கட்டணத்தை மீளாய்வாண்டின் போது அமைச்சினால் செலுத்த வேண்டியிருந்தது.

(ii) 2004 ஆம் ஆண்டு முதல் 36 வாகன விபத்துக்களினால் ஏற்பட்ட ரூபா 1,464,528 தொகையான நட்டங்களும் இழப்புகளும் ஒதுக்கீட்டு கணக்கில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 1.9 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

தெரிவுக் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட செயற்பாட்டுத் திறமையீனங்கள் தொடர்பான பொழிப்பு பின்வருமாறாகும்.

2010 வருடாந்த மதிப்பீட்டின் மூலம் மாற்று மின்சக்தி உருவாக்கத்தை மேம்படுத்தும் செயற்திட்டத்தின் அறிவுறுத்தல் சேவைக்காக

பெற்றுக்கொள்ளப்பட்ட மொத்த ஏற்பாடும் வேறு செலவின விடயத்திற்காக மாற்றப்பட்டிருந்த போதிலும் அச் செயற்திட்டத்திற்கு உரித்தான ரூபா 24,459,531 தொகையான செலவினம் ஏற்கப்பட்டிருந்ததாகவும் அச் செலவினம் திறைசேரியினதும் அமைச்சினதும் செலவின பேரேட்டில் பதியப்பட்டிராததுடன் 2010 ஒதுக்கீட்டுக் கணக்கின் மூலமும் வெளிப்படுத்தப்பட்டிராமையும் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

**1.10 மனிதவள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் மற்றும் வெற்றிடங்கள்**

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஊழியர் எண்ணிக்கை தொடர்பான நிலைமை பின்வருமாறாகும்.

| ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கை | உள்ளபடியான எண்ணிக்கை | | | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| | | நிரந்தர ஊழியர்களின் எண்ணிக்கை | வேறு நிறுவகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | மொத்த ஊழியர்களின் எண்ணிக்கை | |
| சிரேஷ்ட நிலை | 18 | 16 | 02 | 18 | - |
| இரண்டாம் நிலை | 49 | 39 | 09 | 48 | 01 |
| ஆரம்ப நிலை | 44 | 34 | 05 | 39 | 05 |
| மொத்தம் | 111 | 89 | 16 | 105 | 6 |

## 1.11 உள்ளகக் கட்டுப்பாடு

### (அ) உள்ளகக் கணக்காய்வு

2008 யூன் 01 ஆம் திகதி முதல் ஸ்தாபிக்கப்பட்ட உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு கணக்காளர் (உள்ளகக் கணக்காய்வாளர்) மற்றும் ஒரு முகாமைத்துவ உதவியாளரை உள்ளடக்கியிருந்ததுடன் 2010 திசெம்பர் மாதம் முதல் அக் கணக்காளர் அமைச்சுச் செயலாளரின் பரிந்துரைப்பில் அமைச்சின் கீழேயே இயங்கும் வேறு ஓர் நிறுவகத்தின் பணிப்பாளர் (நிதி) பதவிக்கு இரண்டாம் நிலை அடிப்படையில் விடுவிக்கப்பட்டு இதற்கு மேலதிகமாக அவருக்கு அமைச்சின் உள்ளகக் கணக்காய்வாளர் பதவியின் பதில் கடமையாற்றுவதற்கும் இடமளிக்கப்பட்டிருந்தது.

### (ஆ) முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழு செயற்படுத்தல்

மீளாய்வாண்டின் போது முகாமைத்துவ மற்றும் கணக்காய்வுக் குழுக் கூட்டம் ஒன்று மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது.